விளம்பரம் எண் :6/2020 நாள். 17.06.2020

**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், வேலூர் மண்டலம்,**
**(வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்கள்)**
**கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம், வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர் -9**

ஒருங்கிணைந்த வேலூா மாவட்டத்தில் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளுக்கு **விற்பனையாளர் மற்றும் கட்டுநர்** பதவிகளுக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கான நேர்முகத் தேர்விற்கு 31.07.2020 பிற்பகல் 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | நேரடி நியமன பதவி பெயர் | சம்பள ஏற்ற முறை | கூட்டுறவு நிறுவனத்தின் வகை | காலிப்பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | நியாய விலைக்கடை விற்பனையாளர் | 1.தொகுப்பு ஊதியம் ரூ.5000/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br><br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ.4300-12000/- | 1.வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை | 26 |
| | | | 2.தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் | 121 |
| | | | 3.வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 07 |
| | | | 4. நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் | 7 |
| | | | 5. பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம் | 02 |
| | | | 6.பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள் | 3 |
| | | | | 166 |
| 2. | நியாயவிலைக் கடை கட்டுநர் | 1.தொகுப்பு ஊதியம் ரூ.4250/- நியமன நாளிலிருந்து ஓராண்டுவரை<br><br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ.3900- 11000/- | 1.வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை | 20 |
| | | | 2வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 5 |
| | | | | 25 |

## 2. காலிப்பணியிடங்களுக்கான வகுப்புவாரி பகிர்மானப் பட்டியல்

| பதவி | மொத்த காலிப் பணியிடம் (Total) | வகுப்புவாரி இட ஒதுக்கீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொதுப் போட்டி(GT) | பிற்படுத்தப் பட்டடோர் (முஸ்லீம் அல்லாதோர்) (BC) | பிற்படுத்தப் பட்டடோர் (இஸ்லாமியர்) BC(M) | மிகவும் பிற்படுத்தப் பட்டடோர் / சீர்மரபினர் (MBC/DNC) | ஆதி திராவிடர் (SC) | ஆதி திராவிடர் (அருந்த தியர்) (SCA) | பழங் குடியினர் (ST) |
| நியாய விலைக் கடை விற்பனை யாளர் | 166 | 51 | 44 | 06 | 33 | 25 | 05 | 02 |
| நியாய விலைக் கடை கட்டுநர் | 25 | 07 | 07 | 01 | 05 | 04 | 01 | 00 |

குறிப்பு:- மதிப்பிடப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை ( Estimated Vacancies ) தற்காலிகமானது. ( Tentative) மாற்றத்திற்குட்பட்டது. சேர்த்தலுக்கும் உட்பட்டது.

## நிபந்தனைகள்:-

1. மேற்படி பதவிகளுக்கான நேரடி நியமனத்தின்போது தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வுக்குப் பின்பற்றப்படும் இட ஒதுக்கீடு மற்றும் இன சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் பின்பற்றப்படும்.

2. நியமனத்தின்போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாதபோது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையைத் தகுதி வாய்ந்த அதே வகுப்பினைச் சார்ந்த ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.

3. ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள், (கண் பார்வையற்றோர் தவிர), தமிழ்வழி கல்வி பயின்றோர் மற்றும் முன்னாள் ராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், இந்த நியமனத்தின்போதும் பின்பற்றப்படும்.

4. நியாயவிலைக்கடை விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் **விண்ணப்பதாரர்கள் தனித்தனியே அதற்குரிய விண்ணப்பங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.**

5. மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் வேலூர் மண்டலத்தில் உரிய காரணங்களுடன் மேல் முறையீடு செய்யப்பட வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் எதுவும் ஏற்கப்படமாட்டாது.

6. மாற்றுத்திறனாளிகளில் பார்வைதிறனற்ற நபர்கள் விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க இயலாது.

7. பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவை சான்று வருவாய் கோட்டாட்சியர் நிலைக்குக் குறையாத அலுவலரிடமிருந்து பெற வேண்டும்.

8. ஆதிதிராவிடர் (Scheduled Caste ) சான்று வருவாய் வட்டாட்சியர் நிலைக்குக குறையாத அலுவலரிடமிருந்து பெற வேண்டும்.

9. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் சான்று துணை வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத அலுவலரிடமிருந்து பெற வேண்டும்.

## 3. தகுதிகள்:-

அ. வயது (01.01.2020 அன்றுள்ளபடி)

விண்ணப்பதாரர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும்
(31.12.2001 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும் )

| வ. எண் | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | குறைந்தபட்ச வயது (முடிவடைந்திருக்கவேண்டும்) | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1. | ஆதி திராவிடர், ஆதி திராவிடர்(அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் ) மற்றும் அனைத்து வகுப்பினைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | 18 வயது | வயது வரம்பு இல்லை |
| 2. | மேற்படி வகுப்பினைச் சாராத இதர விண்ணப்பதாரர்கள் | 18 வயது | 30 வயதிற்குள் |

## குறிப்பு -

1) ஆதிதிராவிடர், ஆதிதிராவிடா (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) தவிர ஏனைய வகுப்பினைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் 10 ஆண்டு வரை வயது வரம்புச் சலுகை பெற தகுதியுடையவராவார்கள்.

2) ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) தவிர ஏனைய வகுப்பினைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினருக்கு அரசாணையின்படி வயது வரம்பு சலுகை வழங்கபபடும்.

3) ஏற்கனவே ஏதேனும் ஒரு பிரிவு/ பணி/பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னாள் இராணுவத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர் முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது. (தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 3(i)(vii)) -

## ஆ. கல்வித் தகுதிகள்:-

| | | |
|---|---|---|
| 1. | நியாய விலைக்கடை விற்பனையாளர் | பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி ( +2 Pass) |
| 2. | நியாயவிலைக் கடை கட்டுநர் | பத்தாம் வகுப்பு தேர்ச்சி ( 10th Pass) |

## 4. தமிழ் மொழித் திறன்:-

விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாள் அன்று தமிழ் மொழியில் எழுதப் படிக்க போதுமான திறன் உள்ளவராக இருக்க வேண்டும். இதற்கு எஸ்.எஸ்.எல்.சி (SSLC) அல்லது அதற்கு இணையான தேர்வுகளில் தமிழ்வழி கல்வியோ அல்லது தமிழை ஒரு பாடமாக எடுத்து படித்து தேர்ச்சி பெற்றதற்கான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

## 5.உடற்தகுதி சான்றிதழ்:-

மேற்படி பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்குக் குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச் சான்றிதழினைச் சமர்ப்பிக்க வேண்டும். தகுதி பெற்ற கண் மருத்துவரிடம் பெறப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் மேற்படி பதவிகளுக்கான பணியினைச் செய்வதற்குத் தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பட்ட சான்றிதழினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

## 6. தெரிவு செய்யும் முறை:-

மேற்படி காலிப் பணியிடங்கள் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் இவ்விளம்பரம் மூலம் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் ஆகியோர்களில் தகுதி பெற்றவர்களை நேர்முக தேர்விற்கு அழைக்கப்பட்டு அவர்கள் நேர்முக தேர்வில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் தரவரிசைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு இட ஒதுக்கீடு மற்றும் இன சுழற்சி முறை ஆகயவை பின்பற்றப்பட்டு காலி பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டு பணியிடம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 7.நேர்முகத் தேர்வு

நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பத்தில் குறிப்பிட்ட அஞ்சலக முகவரிக்கு அனுப்பப்படும். நேர்முகத் தேர்விற்குக் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத் தேர்விற்குக் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும், பணி நியமனம் தொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது. நேர்முகத் தேர்விற்குத் தகுதியான விண்ணப்பதாரர் அழைக்கும்பட்சத்தில் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது. நேர்முகத் தேர்வு அழைப்பாணை அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை கிடையாது.

## 8. காலிப் பணியிடங்களுக்கான விருப்பம் தெரிவித்தல்

விண்ணப்பதாரர்கள், தாங்கள் எந்த நிறுவனத்தின் நியாய விலைக் கடைக்குப் பணியமர்த்தப்பட வேண்டும் என்பதற்கான விருப்பத்தை நேர்முகத் தேர்வின்போது தெரிவிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் முன்னுரிமை வரிசையில் அவர்கள் தெரிவித்திருந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கு தேர்வு செய்யப்படுவதற்குத் தேவையான மதிப்பெண், தரவரிசை, இடஒதுக்கீடு மற்றும் இன சுழற்சி தரவரிசை ஆகியவற்றைப் பெற்றிருக்காத நேர்வில மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் வேலூர் மண்டலத்தின் முடிவின்படி அவர்களுக்குப் பணியிடம் ஒதுக்கப்படும். இது தொடர்பாக மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது. ஒதுக்கீடு செய்த பின்னர் அவ்ஒதுக்கீட்டை மாற்றக்கோரும் எந்த ஒரு கோரிக்கையும் ஏற்கப்படமாட்டாது.

## 9. விண்ணப்பங்கள் கிடைக்கும் இடங்கள்

மேற்படி நியாயவிலைக் கடை விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணி நியமனங்களுக்கான விண்ணப்பப் படிவத்தைக் கீழ்க்கண்ட அலுவலகங்களின் வேலை நாட்களில், வேலை நேரத்தில் **இலவசமாகப்** பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் அலுவலகம், வேலூர் சரகம், எண்.6 துளசிங்கம் பிள்ளை தெரு, வடிவேல் நகர், சங்கரன்பாளையம், வேலூர்-632 001. |
| 2 | வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, இராஜகோபால் நிலையம், எண்.32 அண்ணாசாலை, வேலூர் 632 001. |
| 3 | வேலூர் மாவட்ட கூட்டுறவு அச்சகம், எண்.1, வேப்பமரத் தெரு, வேலூர் - 632 001. |
| 4 | குடியாத்தம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் (T.N.S.C) குடோன், R.S. ரோடு செதுக்கரை, குடியாத்தம்-635803 |

| | |
|---|---|
| 5 | கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் அலுவலகம், இராணிப்பேட்டை சரகம், எண்.14 ஆற்காடு ரோடு, டாக்டர் சுலோச்சனா மருத்துவமனை வளாகம், கீழ்த்தளம், இராஜேஸ்வரி தியேட்டர் எதிரில், இராணிப்பேட்டை-632 401. |
| 6 | அரக்கோணம் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி எண்.1 ஜோதி வள்ளலார் தெரு, ஜோதி நகர், அரக்கோணம்- 631003 |
| 7 | கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் அலுவலகம், திருப்பத்தூர் சரகம், கற்பகம் கூட்டுறவு பண்டகசாலை கட்டடம் (முதல்தளம்), தூய நெஞ்ச கல்லூரி எதிரில், வாணியம்பாடி ரோடு, திருப்பத்தூர் -635601. |
| 8 | ஆம்பூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் கிருஷ்ணாதியேட்டர் அருகில் எல் மாங்குப்பம் (கிராமம்), தேவலாபுரம் (அஞ்சல்) ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் - 635802 |

## 10. விண்ணப்பப் பதிவுக் கட்டணம்:-

நியாய விலைக்கடை விற்பனையாளர் நியமனத்திற்கான விண்ணப்பப் பதிவுக் கட்டணம் **ரூ.150/-** மற்றும் நியாயவிலை கடை கட்டுநர் நியமனத்திற்கான விண்ணப்பப் பதிவுக் கட்டணம் **ரூ.100/-** ஆகும். ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் **(அருந்ததியர்**), பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்பைச் சார்ந்த மாற்றுத் திறனாளிகள் மற்றும் **ஆதரவற்ற விதவைகள்** இந்த விண்ணப்பப் பதிவுக்கட்டணம் செலுத்த தேவையில்லை. மேற்படி கட்டணம் **வேலூர்** மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் "மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், வேலூா ம**ண்டலம்**" (District Recruitment Bureau, Veeloor Region) பெயரில் வரைவோலையாக (Demand Draft) எடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் எண், மற்றும் விண்ணப்பதாரரின் பெயர் ஆகியவை வரைவோலையின் பின்புறம் தவறாது எழுதப்பட வேண்டும்.

பதிவுக் கட்டண தொகைக்கான வரைவோலை இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். ஒரு முறை செலுத்தப்பட்ட விண்ணப்பப் பதிவுக் கட்டணம் எக்காரணம் கொண்டும், திருப்பி அளிக்கப்பட மாட்டாது.

## 11. விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய இணைப்புகள்:-

விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களையே இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும், அசல் (Original Certificate) சான்றிதழ்களை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பக்கூடாது. சான்றளிக்கப்பட்ட சான்றிதழ்கள், இணைக்கப்படாமல் அனுப்பப்படும் விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும்.

## 12. தடையில்லா சான்றிதழ்:-

விண்ணப்பதாரர் ஏற்கனவே பணியாற்றுபவர் (நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ) இருக்கும்பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தேவையான தடையில்லா சான்றிதழினைப் பெற்று நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

## 13. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைப் பெறுதல்

அ. 1. விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. விண்ணப்பப் படிவங்கள் Blue or Black பந்து முனை பேனா (Ball Point Pen) கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் **விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் இட வேண்டும்.** கையொப்பம் இல்லாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. விண்ணப்பப் படிவத்தில் அனைத்து கலங்களும், இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களின் அடிப்படையில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4. விண்ணப்பப் படிவத்துடன் பதிவுக்கட்டணத்திற்கான வரைவோலை தவறாமல் இணைக்கப்பட வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள நேர்முக தேர்வுக்கான அழைப்ப கடிதத்தில் (Interview call letter )பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டி, சுய விலாசம் எழுதி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் 24 X 10 செ.மீ அஞ்சல் உறையில் மட்டும் விண்ணப்பதாரரின் முகவரியை எழுதி ரூ.27/-க்கான அஞ்சல் வில்லையை ஒட்டி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

ஆ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இணைப்பதிவாளர்/தலைவர், மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், வேலூர் மண்டலம் **கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம், வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர் மாவட்டம், வேலூர்- 632 009** என்ற முகவரிக்கு <u>**31.07.2020 பிற்பகல் 5.45 மணிக்கோ**</u> அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட நேரத்திற்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அஞ்சல் தாமதத்திற்கான காரணங்களுக்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் வேலூர் மண்டலம் பொறுப்பேற்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்,
வேலூர் மண்டலம்